2012 நவம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் மட்டுமல்ல; எங்கெங்கெல்லாம் மின்சார வாரிய அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ, அந்த இடங்களில் எல்லாம், மின் வாரியத்திற்குச் சொந்தமான இடத்திலே, அதற்காகச் சொந்தக் கட்டடங்களைப் படிப்படியாகக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில், மின் வாரியத்தினுடைய நிதி நிலைமை சீரடையச் சீரடைய, நிதி நிலைமைக்கேற்ப, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து மின் வாரிய அலுவலகங்களுக்கும், சொந்தக் கட்டடங்கள் படிப்படியாகக் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

பரிசோதனைக் கூடம்

***3948—திரு. ஆர். சந்திரசேகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதியில் மண்டல குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் அனைத்து 31 மாவட்டங்களிலும், மாவட்ட அளவிலான குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் மாவட்டத் தலைமையிடத்தில் இயங்கி வருகிறது. அதுபோன்று, திருச்சியிலும் ஓர் ஆய்வகம் பொதுமக்கள் பயன்பெறும்வகையில் இயங்கி வருகிறது. மேலும், மத்திய அரசின் உதவியுடன் தேசிய ஊரகக் குடிநீர் தர மேலாண்மை மற்றும் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ், 51 உபகோட்ட அளவிலான குடிநீர் தரப் பரிசோதனைக் கூடங்களும் இயங்கி வருகின்றன. அதன்படி, மணப்பாறை தொகுதியிலும் உபகோட்ட அளவிலான குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் 2010-லிருந்து அந்தத் தொகுதியில் வழங்கப்படும் குடிநீர் மற்றும் நீராதாரங்களின் தரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

திரு. ஆர். சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" - இதுதான் தன்னுடைய இலட்சியம் என வாழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பொது மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்பதற்காக, இந்த ஆண்டில் 2.46 இலட்சம் ஊரகக் குடிநீர் ஆதாரங்களின் குடிநீர் மாதிரிகளை தரப் பரிசோதனை செய்ய ஆணையிட்டதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில், எனது மணப்பாறை தொகுதி, மணப்பாறையில் மண்டலக் குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் ஒரு பரிசோதனைக் கூடமும், உப கோட்ட அளவில் மத்திய அரசு உதவியுடன் ஒரு பரிசோதனைக் கூடமும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதனடிப்படையிலே, மணப்பாறை உப கோட்டத்தில் மத்திய

அரசின் உதவியுடன், நீர் பரிசோதனை செய்வதற்கென ஓர் அமைப்பு இருக்கிறது. அதுவே போதுமானது என்று கருதிய காரணத்தினால், அதை வைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.*

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

சாலை வசதி

*20827—**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள முந்திரித் தோட்டங்களில் உள்ள கிராமங்களை இணைக்கும் வகையில் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் வியாபார நோக்கம் கொண்ட நிறுவனமாதலால், பொதுமக்களின் உபயோகத்திற்காக சாலை வசதி போன்ற பணிகள் செய்ய எந்தவொரு திட்டமும் இல்லை. மேலும், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளிடமிருந்து சாலை வசதி கோரி எந்தவொரு கருத்துருவும் பெறப்படவில்லை. அவ்வாறு கருத்துரு ஏதும் கிடைக்கப்பெற்றால், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்கீழ், சாலை